காலைக்கதிர் செவ்வாய் | 12.2.2019

# என்.ஜி.ஓ.,க்களை முறைப்படுத்த மாநில கலந்தாய்வில் தீர்மானம்

மோகனூர், பிப். 12–

'புற்றீசல் போல் பெருகி வரும் தொண்டு நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்களை முறைப்படுத்த வேண்டும்' என, மாநில கலந்தாய்வு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

அரசு சாரா தொண்டு நிறுவனங்களின் கூட்டமைப்பு சார்பில், மாநில கலந் தாய்வு கூட்டம், நாமக்கல் மாவட்டம், மோகனூரில், பொறுப்பாளர் சதீஷ்பாபு தலைமையில் நடந்தது.

அரசு செயல்படுத்தும் திட்டங்களில், ஒவ்வொரு தனி மனிதனுக்கும் பயன் களை கொண்டு சேர்ப்பதில், தொண்டு நிறுவனங்கள் முக் கிய பங்கு வகிக்கின்றன. ஆனால், அதற்கான அங்கீகா ரத்தை பெற முடியவில்லை. ஊராட்சிகளில் செயல்ப டுத்தும் திட்டங்களில், என்.ஜி.ஓ.,க்களை, உதவி செய்யும் நிறுவனமாக அங்கி கரிப்பதில்லை.

புற்றீசல் போல் பெருகி வரும் தொண்டு நிறுவ னங்கள், அரசு சாரா நிறுவ னங்களை முறைப்படுத்த வேண்டும். சமூக மேம் பாட்டு பணிகளில் அனு பவமுள்ள தொண்டு நிறு வனங்களை மாவட்ட திட்டக்குழுவில் இடம் பெறச் செய்ய வேண்டும்.

அரசு துறைகளில், அங்கீ காரம் பெற்ற, அரசு சாரா தொண்டு நிறுவனங்களை பணியமர்த்த வேண்டும். மேலும், அந்நிறுவனங்கள் மூலம், வேலையில்லா பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பை உருவாக்க வேண்டும் என்பன உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.